1973 டிசம்பர் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வின எண்கள் 599, 600, 601, 602 ஆகியவை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

ஓமியோபதிக் குழு

*603 **வின—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமியோபதி கௌன்சில் நமது நாட்டில் ஏற்படுத்தப் பட்டுள்ளதா?

(இ) அந்தக் கௌன்சிலில் அங்கம் வகிக்கும் நபர்களுக்கு இருக்க வேண்டிய Qualifications யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) ஆம்.

(இ) இந்தக் குழு உறுப்பினர் பதவிக்குரிய தகுதிகள் பின் வருமாறு :—

(1) தமிழ்நாட்டில் சாதாரணமாக வசிப்பவராயிருக்க வேண்டும் ;

(2) அவர் கடன் தீர்க்க சக்தியற்றவரென்று தீர்ப்பளிக்கப் படுவதற்காக விண்ணப்பித்துக்கொண்டவராகவோ கடன் தீர்க்க சக்தியற்றவர் என்ற நிலையிலிருந்து விடுவிக்கப்படாத கடனாளியா கவோ இருக்கக்கூடாது;

(3) சித்த சுவாதீனமுள்ளவராக இருக்க வேண்டும்;

(4) குற்ற வழக்குகள் நீதிமன்றத்தால், ஒழுக்கக்கேடு சம் பந்தப்பட்ட ஒரு குற்றத்திற்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட வராக இருக்கக் கூடாது ;

(5) குழுவில் ஊதியம் பெறும் ஊழியராக இருக்கக் கூடாது;

(6) இருபத்தைந்து வயது நிரம்பியவராயிருக்கவேண்டும்;

(7) அரசு நியமிக்கக் கூடிய மூன்று அதிகாரிகள் தவிர மற்றவர்கள் பதிவு பெற்ற மருத்துவராயிருக்க வேண்டும்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஹோமியோபதி கவுன்சிலில் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிற அதிகாரிகளே இருக்கிறார்களே, பொதுவாக யுனிவர்சிடி போன்றவற்றின் குழுக்

களில்கூட சட்டமன்ற உறுப்பினர்கள் இடம் பெறுகிறார்கள். ஆனால், ஹோமியோபதி கவுன்சிலில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூட இடம் பெறவில்லை. அரசாங்கம் நியமனம் செய்யும் இந்தக் கவுன் சிலில் ஒரு சட்டமன்ற உறுப்பினராவது இடம் பெற அரசு வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறவர்கள் இலாக்காவைச் சேர்ந் தவர்கள். அவர்கள் நிர்வாக வசதிக்காகவும் பொறுப்புக்காகவும் இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களில் ஹோமியோபதி பதிவு செய்தவர்களாக யாராவது இருந்தால் அவர்களை நான் இடம் பெறச் செய்ய முயற்சி செய்வேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஏற்படுத்தப்பட்ட ஹோமியோபதி குழு வின் கடமைகள் என்ன என்ன? எந்த எந்த காரியங்களுக்காக அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர் கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் ஹோமியோபதி மருத்துவ முறையை அரசு ஒரு முறை யான மருத்துவம் என்று ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து, ஹோமியோபதி மருத்துவர்கள் அதற்காக விதிக்கப்பட்ட தகுதி களின்படி பதிவு செய்யப்படுவதற்காகவும், அந்த ஹோமியோபதி கல்வி முறையை ஒழுங்குபடுத்துவதற்காகவும், அவசியமானால் தனி யார் நடத்துகிற கல்வி நிலையங்களை அங்கீகரிப்பதற்காகவும், ஹோமியோபதிக் கல்லூரியை அவசியமானால் நடத்துவதற்காக வும் இந்தக் கவுன்சில் வேறு பல மாநிலங்களில் அமைக்கப்பட்டிருக் கிற முறையைப் பின்பற்றி தமிழகத்திலும் அமைக்கப்பட்டிருக் கிறது.

Drug stores in town areas

*604 *Q.*—Dr. H. V. HANDE:
THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have any proposal to open drug shops round the clock in small towns to enable the public to get life saving medicines; and

(*b*) if so, the details thereof?